மின்துறை

செய்திக் குறிப்பு

## தொழிற்சாலைகளுக்கு புதிய தளர்வு

புதுச்சேரியில் எளிதாக வணிகம் செய்ய ஏதுவாக, தொழில்முனைவோரின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்று, புதிய தளர்வுகளுக்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பொதுமக்களின் கவனத்திற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

அங்கிகரிக்கப்பட்ட தொழிற்பேட்டையில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு எவ்வித உரிமமும் இனி தேவையில்லை. மேலும், குறைந்தழுத்த தொழிற்சாலைகளில் 100KW-றக்கு மேல் கூடுதல் இயந்திரங்களை அமைத்துக்கொள்ளலாம். மேலும், தொழிற்சாலைகள் மின் இணைப்பு கோரும்போது அனைத்து இயந்திரங்களை அமைக்கவேண்டிய அவசியமில்லை.

புதிய மின் இணைப்பு வழங்குவதற்கு, நகர பகுதியில் விண்ணப்பம் பெறப்பட்ட 7 நாட்களுக்குள்ளும், கிராம பகுதியில் விண்ணப்பம் பெறப்பட்ட 15 நாட்களுக்குள்ளும், புதிய மின் கட்டமைப்பு அமைக்கும் பட்சத்தில் விண்ணப்பம் பெறப்பட்ட 60 நாட்களுக்குள்ளும் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், 100KVA வரையிலான மின் இணைப்பிற்கு, புதிய மின் மாற்றி அமைத்தல்/மின்மாற்றியின் திறனை அதிகப்படுத்துதல் பணிகள், மின்துறையின் செலவில் மேற்கொள்ளப்படும். இத்தகைய மின் இணைப்பு, விண்ணப்பம் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் வழங்கப்படும்.

மேலும், பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் பெயர் மாற்றப்படும். கூடுதல் மின் பளு/நடவடிக்கை மாற்றம் செய்யப்படாத பட்சத்தில், கூடுதல் வைப்புத்தொகை வசூலிக்கப்படாது.

10KW-றக்கு மேல் திறன் கொண்ட சூரிய ஒளி மின்கலன் அமைப்பதற்கு தொழில்நுட்ப ஒப்புதல், விண்ணப்பம் பெறப்பட்ட 5 நாட்களுக்குள் வழங்கப்படும். பணிகள் நிறைவுபெற்ற அறிக்கை பெறப்பட்டவுடன், 7 நாட்களுக்குள் சூரிய ஒளி மின்கலன் மின்கட்டமைப்பில் இணைக்கப்படும். சூரிய ஒளி மின்கலன் இணைப்பிற்கு கூடுதல் வைப்புத்தொகை ஏதும் வசூலிக்கப்படாது.

S.R

SUPERINTENDING ENGINEER
-cum-HOD
Electricity Department
Puducherry